1992........ අංක ...01...... දරණ මධ්‍ය...... පළාතේ

මුදල් (සංශෝධන ) ප්‍රඥප්තිය.

19.92..... ஆம் ஆண்டு ..01... இலக்க மத்திய...

மாகாணத்தின் நிதி (திருத்த) நியதிச்சட்டம்.

**A STATUTE TO AMEND THE FINANCE STATUTE OF THE PROVINCE**

**NO OF**

.....1992.........ஆம் ஆண்டின்...01...ஆம் இலக்க
..மத்திய...............மாகாணம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இந்நயதிச்சட்டம்..1992.....ஆம் ஆண்டின்.....01..ஆம் இலக்க...மத்திய........மாகாண நிதி(திருத்த) நியதிச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1990ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி நியதிச் சட்டத்தின் 11ம் பிரிவைத் திருத்துதல்.

2. 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி நியதிச் சட்டத்தின் (இது இதனகத்திதன் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 11ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியின் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.:-

"ஆயின் எவ்வாறுயினும், ஏதேனும் முன்னைய காலாண்டுக்கான ஏதேனும் தொழிலிலிருந்து வரும் மொத்த விற்பனை வரவு பத்து இலட்சம் ரூபாவை மிஞ்சுகின்றவிடத்து, அடுத்துவரும் காலாண்டுக் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி பின்வரும் முறையில் செலுத்தப்படலாம்.:-

(அ) முன்னைய காலாண்டுக்குக் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மூன்றிலொன்று அடுத்துவரும் காலாண்டின் இரண்டாவது மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு பிந்தாமல்;

(ஆ) முன்னையகாலாண்டுக்குக்கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் அடுத்த மூன்றிலொன்று அடுத்து வரும் காலாண்டின் மூன்றுவது மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர்;

(இ) அடுத்துவரும் காலாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் மீதி, அக்காலாண்டின் முடிவை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல்."

முதன்மை நியதிச் சட்டத்தின் 37ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மை நியதிச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு, அதன்(இ) என்னும் பந்தியில் "கைமாற்றம் ஒவ்வொன்றின் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கைமாற்றல் சாதனம் ஒவ்வொன்றின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மை நியதிச்சட்டத்தின் 39ஆம் பிரிவு, அதன்(5)ஆம் பந்தியில், அதன்(ஊ) என்னும் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.:-

"(ஊ) 1978ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்ட உதவித் திட்டத்தின் நிருவாகியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட எவரேனும் ஆயினால் அல்லது ஆளின் சார்பில் அந்த சொல்லப்பட்ட சட்ட உதவிச் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட உதவியுடன் வழக்காடும், எதிர்வாதஞ்செய்யும் அல்லது தலையிடும் விதமாக அதன் சார்வில் அவரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அவ்வலரால் அல்லது அவர் சார்பில் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்களும்".

முதன்மை நியதிச்சட்டத்தின் 40ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மை நியதிச்சட்டத்தின் 40ஆம் பிரிவானது அதன் (2)ஆம் உட்பிரிவில் பின்வரும் சொற்களை நீக்கஞ்செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" ஆயின், அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற நொத்தாரிசு அதற்கான காரணங்களை உறுதியில் அத்தாட்சிப் படுத்துதல் வேண்டும்."

முதன்மை நியதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மை நியதிச்சட்டத்தின் 41ஆம் பிரிவானது, அதன் (3)ஆம் உட்பிரிவில் "கூறப்பட்டுள்ள முறையில் பெறுமதியளிக்கப்பட்டில்லாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " தரப்பட்டுள்ள முறையில் நீக்கஞ் செய்யப்பட்டிராத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 43அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.

7. பின்வரும் புதிய பிரிவானது 43ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகிறது. என்பதுடன் அது முதன்மை நியதிச்சட்டத்தின் 43அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:-

"

" ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணத்துக்குள் அமைந்துள்ள ஆதனம் தொடர்பிலான முத்திரை வரி.

43அ. சாதனமொன்று:-

(அ) எந்த அசைவற்ற ஆதனத்தின் ஒரு பாகம் மாகாணத்தின் எல்லைக்ளுக்குள்ளாகவும், அடுத்தபாகம் ஒன்றோ பலவோவாய ஏணைய மாகாணங்களின் எல்லைகளுக்குள் ளாகவும் அமைந்திருக்கின்றதோ அந்த அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பிலானதாக இருக்கின்றவிடத்து, அத்தகைய சாதனம் ஒன்றில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்படற்பாலதான முத்திரை வரி கொண்டு அதன் கண் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அல்லது ஆதனத்தின் அ அடுத்த பாகம் எந்தவேறு மாகாணத்தில் அல்லது மாகாணங்களில் அமைந்துள்ளதோ விடயத்திற்கேற்றப்போல அந்த மாகாணத்தின் அல்லது மாகணங்களின் ...

நியதிச்சட்டத்தின் கீழ் அறவிடப்படற்பாலதான முத்திரை வரி கொண்டு அந்நியதிச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முத்திரை யிடப்பட்டால், அத்தகைய ஆதனம் தொடர்பில் அது முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அசைவற்ற ஆதனங்களுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை மாகாணத்தின் எல்லைக்குள்ளாக அமைந்தும் ஏணைய ஆதனம் அல்லது ஆதனங்கள் ஏனைய ஆதனம் அல்லது ஆதனங்கள் ஏனைய மாகாணங்களுள் ஒன்றின் அல்லது பலவற்றின் எல் லைகளுக்குள் அமைந்தும் இருக்கும் அசைவற்ற ஆதனங்களின் கைமாற்றம் தொடர்பிலானதாக இருக்கின்றவிடத்து அத்தகைய சாதனம் ஒன்றில் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அறவிடப்படற்பாலதான முத்திரை வரிகொண்டு அதன் கண் ஏற்பாடுசெய் யப்பட்ட முறையில் அல்லது அடுத்த ஆதனம் அல் லது ஆதனங்கள் எம் மாகாணத்தின் அல்லது மாகாணங்களின் எல்லைக் குள்ளாக அமைந்துள்ளதோ, விடயத்துக்கேற் றபோல வேறு மாகாணத்தின் அல்லது மாகாணங் களின் நிதி நியதிச்சட்டத்தின் கீழ் அறவிடப்படற் பாலதா முத்திரை வரிகொண்டு அந்நியதிச்சட்டத் தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் முத் திரையிடப்பட்டால் அத்தகைய ஆதனம் தொடர் பில் அது முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்,"

*முதன்மை நியதிச் சட்டத்தின் 45ம் பிரிவைத் திருத்தல்*

8. முதன்மை நியதிச்சட்டத்தின் 45 ஆம் பிரிவு "இரண்டு ரூபா பெறுமதியான முத்திரைகள்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஒரு ரூபா பெறுமதியான முத்திரை அல்லது அத்தகைய ஒரு ரூபா முத்திரை வரி 40ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் தரப்பட்ட முறையில் விதித்துரைக்கப்பட்ட வங்கியொன்றில் செலுத்தப்படலாம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மை நியதிச்சட்டத்தின் 46வது பிரிவைத் திருத்துதல்.*

9. முதன்மை நியதிச்சட்டத்தின் 46ஆம் பிரிவு :-

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவில் "பின்வரும் நிபந்தனைகளின் மீது ஏதேனும் அத்தகைய நீதிமன்றத்தில்" என்னுஞ் சொற் களுக்குப் பதிலாக, "பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக, அத்தகைய நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நடவடிக் கைகளில்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும், அத்துடன்

(ஆ) அதன் (2) ஆம் உட்பிரிவில், " இப்பிரிவுக்கிணங்க இணங்கிக் கொள்ளப்பட்டுள்ள அத்தகைய முத்திரை வரியின் கொடுப்பனவு என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "இப்பிரிவுக்கிணங்க அத்தகைய முத்திரை வரி இணங்கிக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் அத்தகைய ஆவணம் முறையாக முத்திரையிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்,

இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 47ஆம் பிரிவைத் திருத்துதல்,

10. முதன்மை நியதிச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் " வேறேதேனும் சட்டவாக்கத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்ட" என்னுஞ் சொற்களுக்குப்பதிலாக, "இந்த நியதிச்ச சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 50ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மை நியதிச்சட்டத்தின் 50ஆம் பிரிவு, "அறவிடப்படற்பாலதான" என்னுஞ் சொல்லுக்குப்பதிலாக " அறவிடப்படற்பாலனவாக" என்னுஞ் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 51ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மை நியதிச்சட்டத்தின் 51ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப்பதிலாக இடப்படுகின்றது:-

"வரியாரால் கொடுபட வேண்டும் என்பது."

51. முரணை உடன்படிக்கையொன்று இருந்தால் தவிர:-

(அ) கைமாற்றல் சாதனத்தின் விடயத்தில் பகாணியைப் பெறுவராலும்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், அச்சாதனத்தை வரையும் இ ஆக்கும் அல்லது நிறைவேற்றும் ஆளினல்

முத்திரை வரி கொடுபடற்பாலதர்தல் வேண்டும்."

முதன்மை நியதிச் சட்டத்தின் 52ஆம் பிரிவைத் திருத்துதல்

13. முதன்மை நியதிச்சட்டத்தின் 52ஆம் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவில் "அத்தகைய இறந்த ஆள் அறவிடப்படற்பாலதான" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "இறந்த ஆள் உயிருடன், இருந்திப்பின் இந்நியதிச்சட்டத்தின் கீழ் செய்யவேண்டிய விடயங்கள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 63ஆம் பிரிவைத் திருத்துதல்

14. முதன்மை நியதிச்சட்டத்தின் 63ஆம் பிரிவு " அறவிடப்படற்பாலனவான தொடர்புபட்ட" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அது தொடர்புபட்ட, அறவிடப்படற்பாலனவான" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மை நியதிச்சட்டத்தின் 64 ஆம் பிரிவு, இதன் (2) ஆம் உட்பிரிவில் " அது ஆரம்பத்திலேயே முறையாக முத்திரையிடப்பட்டு " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " ஆரம்பத்திலேயே முறையாக முத்திரை யிடப்பட்டாற்போன்று " என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 65ஆம் பிரிவில் புதிய உட்பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மை நியதிச்சட்டத்தின் 65 ஆம் பிரிவு அதன்(3)ஆம் உட்பிரிவை நேரேயுடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(4) இப்பிரிவின் நோக்கங்களுக்ககக, "முத்திரை" என்ற சொல் ஒட்டுமுத்திரையொன்றை பதித்த முத்திரை யொன்றை அல்லது (40)(2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட முத்திரை வரி செலுத்தியமைக்கான சான்றிதலொன்றை உள்ளடக்கும். "

முதன்மை நியதிச் சட்டத்தின் 66ஆம் பிரிவில் புதிய உட்பிரிவொன்றை உட்புகுத்துதல்.

17. முதன்மை நியதிச்சட்டத்தின் 66ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:-

"(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "முத்திரை" என்ற சொல் ஒட்டு முத்திரையொன்றை, பதித்த முத்திரையொன்றை அல்லது 40(2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட முத்திரை வரி செலுத்தியமைக்கான சான்றிதழொன்றை உள்ளக்கும்."

முதன்மை நியதிச் சட்டத்தின் 68ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மை நியதிச் சட்டத்தின் 68 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) 68ஆம் பிரிவை 68(1) ஆம் பிரிவென மீள விளக்கமிருவதன் மூலம்; அத்துடன்,

(ஆ) மீள்விளக்கமிடப்பட்ட உட்பிரிவை நேரே உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2) ஓராமுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "முத்திரை" என்ற சொல் ஒட்டுமுத்திரையொன்றை, பதித்த முத்திரையொன்றை அல்லது 40(2)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட முத்திரை வரி செலுத்தியமைக்கான சான்றிதழொன்றை உள்ளடக்கும்."

முதன்மை நியதிச் சட்டத்தின் 73ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மை நியதிச்சட்டத்தின் 73ஆம் பிரிவு, அதன் (7)ஆம் உட்பிரிவில்," 5 ஆம் உட்பிரிவில்" என்னுஞ் சொல்லுக்குப்பதிலாக, " (6) ஆம் உட்பிரிவில்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச் சட்டத்தின் 78ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மை நியதிச்சட்டத்தின் 78ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) அதன்(4)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:-

"(4) 40ஆம் பிரிவின் (2) ஆம் அல்லது (3)ஆம் உட்பிரிவில் தரப்பட்டமுறையில் சாதனமொன்றின் மீது முத்திரை வரி செலுத்தப்பட்டதும் அத்தகைய சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு, அத்தகைய சாதனத்தின் இனைப்பிரதியுடன் 40ஆம் பிரிவின்(2) ஆம் உட்பிரிவின் கீழ் வங்கியினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுச்சான்றிதழ் முறையாகப் பொருத்தப்பட்டுள்ளதென அல்லது 40 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட முறையில் ஆணையாளரினால் அச்சாதனம் புறக்குறிப்பிடப்பட்டதென, தவிர, அத்தாட்சியுரையில் சான்றுப்படுத்துதல் வேண்டும்." அத்துடன்

(ஆ) அதன் (4) ஆம் உட்பிரிவை நேரடியுடனடுத்து (5) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய உட்பிரிவு இடப்படுகின்றது:-

"(5) இந்நியதிச்சட்டத்தின் கீழ் முத்திரை வரி அறவிடப்படற்பாலதும், ஒன்றில் 1982 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க 1991 ஜனவரி 1ஆந் திகதி தொடங்கி இந்நியதிச் சட்டம் வலுவுக்குவரும் தேதிவரையிலான காலப்பகுதியின் போது முறையாக முத்திரையிடப்பட்டதுமான ஒரு சாதனம் அல்லது ஆவணம் முறையாக முத்திரையிடப்பட்டதாகக்கருதப்படுதல் வேண்டும்."

முதன்மை நியதிச்சட்டத்தின் ஆம் அத்தியாயத்தை திருத்துதல்.

21. முதன்மை நியதிச்சட்டத்தின் XXXI அத்தியாயத்தின் தலைப்பெயர் "நீதிமன்றக் குற்றப்பணங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக " நீதிமன்றக் குற்றப்பணங்களும் கட்டணங்களும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

.........../7.

முதன்மை நியதிச்சட்டத்தின் 99ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

22. முதன்மை நியதிச்சட்டத்தின் 99ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது.

"நீதிமன்றக் குற்றப்பணங்களும் கட்டணங்களும்

99.(1) மாகாணத்துக்குள்ளாக நியாயாபிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு நீதிமன்றத்துக்குச் செலுத்தப்பட்ட, எழுத்திலானஏதேனும் சட்டத்தின் கீழான வரிகள், இறுப்பனவுகள் வேறு விதிப்பனவுகள் அறவிடுவதற்காக விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் தவிர்ந்த, தவறுகள் தொடர்பிலான எல்லாக்குற்றப்பணங்களும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய குற்றப்பணங்களிலிருந்து செய்யப்பட வேண்டிய ஏதேனும் கொடுப்பனவு தொடர்பாக நீதிமன்றம் ஆக்கக்கூடிய ஏதேனும் பணிப்புக்கு அமைப்பாக, மாகாணத்தின் மாகாண நிதியத்துக்குள் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*(22) 99.(2)12ஆம் பக்கம் பார்க்கவும்

முதன்மை நியதிச் சட்டத்தின் 103 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மை நியதிச்சட்டத்தின்103ஆம் பிரிவு, "விதித்துரைத்த" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக" "விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்" குறித்துரைத்த" என்னும் சொல்லுக்குப்பதிலாக "குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொல்லை, இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை நியதிச்சட்டத்தில் 104 என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

24. 104 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மை நியதிச்சட்டத்தின் 104அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"மாகாண ஊக்குவிப்பு நிதியமொன்றைத் தாபித்தல்.

104அ (1) (இதனகத்திதன்பின்னர் "நிதியம்" எனக் கூறிப்பீடு செய்யப்படும்) மாகாண அறசிறை ஊக்குவிப்பு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கவேண்டும்.

(2) இந்நிதியத்துக்குள் 1991 ஜனவரி 1ஆந் திகதியன்று தொடங்கும் ஆண்டு தொடர்பில் குறைநிரப்பு மானிய வகையாக மாகாண சபை முன்னர் வைக்கப்படச்செய்விக்கப்படும்வாறான அத்தகைய பணத் தொகைகளும் அதன் பின்னர் நிதியத்தின் நோக்கத்துக்காக மாகாண சபையினால் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இந்நிதியத்தில் இருந்து.

(அ) அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் ஏதேனும் திட்டத்துக்கிணங்க மாகாண அரசிறைத் திணைக்களத்தின் அலுவலர்களின் நலன்புரிக்கென தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்,

(ஆ) ஆணையாளரினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தினை திறமையாக நிருவகிப்பதனை நிச்சயப்படுத்துவதற்கென அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடிய ஏதேனும் அத்தகைய திட்டத்துக்கிணங்க மாகாண அரசிறைத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு ஊக்குவிப்புக் படிக்கும்,

கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் அல்லது அதன் சார்வில் அவரால் சிறப்பாக அதிகாரமளிக்கப்படும் மாகாண அரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் விதித்துரைக்கப்பட்ட நடைமுறைக்கிணங்க நிதியத்தை நிருவகித்தல் வேண்டும். "

முதன்மை நியதிச் சட்டத்தின் சிங்கள வரையைத் திருத்துதல்.

25. ----

முதன்மை நியதிச் சட்டத்தின் 106ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மை நியதிச்சட்டத்தின் 106 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) "இச்சட்டம்" என்ற சொற்களுக்குப்பதிலாக "இந்நியதிச்சட்டம்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்

(ஆ) "ஒட்டுமுத்திரை" என்பதன் வரைவிலக்கணத்தில் "பிரிவு 67(1) என்னுஞ் சொல்லமைப்புக்குப் பதிலாக "பிரிவு 76(1) " என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

(இ) " வரிமதிபீட்டாளர்" என்பதன் வரைவிலக்கணத்தில், "அச்சட்டம்" என்னுஞ் சொற்களுக்குப்பதிலாக "இந்நியதிச்சட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பதன் வரைவிலக்கணத்தில் —

(1) அதன் ஓராம் பந்தியில் "சட்டம்" என்ற சொல்லுக்குப்பதிலாக "நியதிச்சட்டம்" என்ற சொல்லை இடுவதன் மூலமும்;

(11) அதன் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு

"(2) அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பில் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது சார்பில் செயலாற்றுவதற்கென ஆள் ஒருவரால் காலத்துக்குக் காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும், கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் கணக்காய்வாளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட தனியாளர் இருந்து கொண்டு, ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அதன்சார்பில் 1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச்சட்டத்தின் கீழ்க்கப்படும் ஒழுங்கு விதிகளின் கீழ் அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட தனியாள்;"

(உ) "அறவிடப்படற்பாலதான" என்பதன் வரைவிலக்கணத்தின் இறுதியில் "அல்லது" என்னுஞ் சொல்லைப் சேர்ப்பதன் மூலமும்;

(ஊ) "புரிவெட்டி" என்பதன் வரைவிலக்கணத்தில், "ஏதேனும் தகடு, அச்சு, கருவி அல்லது அதற்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(எ) "முறையாக முத்திரையிடப்பட்ட" என்பதன் வரைவிலக்கணத்தில் "முத்திரை அல்லது புறக்குறிப்புச் சான்றிதழ்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "முத்திரை அல்லது புறக்குறிப்புச் சான்றிதழ் அல்லது அதனோடிணைக்கப்பட்டகொடுப்பனவுச் சான்றிதழ்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஏ) "சாதனம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "என்பவற்றை உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "மாகாணத்தில் அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பிலான அல்லது மாகாணத்துக்குள்ளாகச் செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் கைமாற்றம் தொடர்பிலான ஒவ்வோர் ஆவணத்தையும் உள்ளடக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஒ) "ஆள்" என்பதன் வரைவிலக்கணத்தின் "ஆட்கள் குழு" என்ற சொற்களை உடனடுத்து "அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களம்" என்னும் சொற்களை சேர்ப்பதன் மூலமும்;

(ஓ) "ஆற்றேணித்தத்துவம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "ஆளுக்கெனச் செயலாற்றுவதற்கென குறித்துரிக்கப்பட்ட ஆள்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஆளுக்காகவும் ஆளின் பெயரிலும் செயலாற்றுவதற்கெனக் குறித்துரைக்கப்பட்ட ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஔ) "காலாண்டு" என்பதன் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்;

" கைமாற்றம் " என்பது ஒரு விற்பனை என்று பொருளாகும். அத்துடன் ஆதனம் ஒன்றுக்கு பயன்தரும் வகையில் உரித்துடைய ஆள் ஒருவருக்கு அல்லது மரணமெய்தியவரின் மரணசாதனத்தின் கீழ் நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு மரணமெய்தியவரின், மரணச் சொத்தின் நிருவாகியினால் அல்லது நிறைவேற்றுவரால் அல்லது பயனுகரிக்கு நம்பிக்கைபொறுப்பாளர் ஒருவரால் எதிர்ப்பயனின்றி, செய்யப்படும் ஆதன உரித்துமாற்ற மொன்றை, நன்கொடையொன்றை அல்லது கொடுத்துமாற்றம் ஒன்றை அல்லது பின்வாழும் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு அல்லது புதிய ஒருவருக்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரினால் அல்லது மரணமெய்தியவரின் நிறைவேற்றுநரால் அல்லது நிருவாகியினால் எதிர்ப்பயனின்றிச்செய்யப்படும் ஆதன உரித்துமாற்றம் ஒன்றை உள்ளடக்கும்; ஆனால் பொதுவில் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியின் பிரிவிடல் உறுதியை அல்லது கைமாற்றவதற்கான உடன்படிக்கையை உள்ளடக்காது;

அத்துடன்

(க) "நம்பிக்கைப் பொறுப்பாளர் " என்பதன் வரைவிளக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிளக்கணத்தை உட்புகுத்துவன் மூலமும்:-

"பெறுமதி" என்பது -

(அ) ஏதேனும் தேதி தொடர்பிலும் (நன்கொடை) அளிக்கப்பட்ட அசைவற்ற ஆதனம் தவிர்ந்த ஏதேனும் ஆதனத் தொடர்பிலும்; வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, அவ்வாதனம் அத்தேதியன்று பகிரங்க சந்தையில்பெற்றிருக்கக்கூடிய விலை என்று பொருளாகும்

(ஆ) 1977, மார்ச்சு 31ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் நன்கொடை அளிப்பவராம் கொள்ளப்பட்ட அசைவற்ற ஆதனமாக இருக்கும், நன்கொடை அளிக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் -

(1) வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி அந்த ஆதனம் 1977, மார்ச்சு 31ஆந் தேதியன்று பகிரங்க சந்தையில் விற்கப் பட்டிருக்குமாயின் என்ன விலைப் பெற்றிருக்குமோ அந்த விலையை 1977 மார்ச் 31ஆந் தேதிக்குப் பின்னரும் ஆதனம் நன்கொடையளிக்கப்பட்ட சாதனத்தின் தேதிக்கு முன்னரும் அவ்வாதனத்துக்குச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள், மாற்றங் கள், சேர்ப்புக்கள் எவையேனும் இருப்பின் அவற்றின் செலவுக்குச் சமமான தொகை யொன்றால் அதிகரித்த தொகை; அல்லது

(11) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி அவ்வாதனம் நன்கொடையளிக்கப்பட்ட சாதனத்தேதியன்று பகிரங்க சந்தையில் விற்கப்பட்டிருந்தால் என்ன விலையைப் பெற்றிருக்குமோ அந்த விலை, ஆகியவற்றில் எது குறைவானதோ அது என்று பொருளாகும்;

(இ) 1977 மார்ச்சு 31ஆந் தேதிக்குப் பின்னர் நன்கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட அசைவற்ற ஆதனமாக இருந்து, அது நன் கொடையளிக்கப்பட்டிருந்தால்,

(1) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, அவ்வாதனம் நன்கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட தேதியன்று பகிரங்க சந்தையில் விற்கப்பட்டால் என்ன விலையைப் பெற்றிருக்குமோ, அந்த விலையை, நன் கொடையளிப்பவரால், அவ்வாதனம் கொள்ளப்பட்ட தேதிக்கு பின்னரும் அவ்வாதனம் நன்கொடையளிக்கப்பட்ட சாதனத்தில் தேதிக்கு முன்னரும் அவ்வாத னத்திற்குச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் மாற்றங்கள், சேர்ப்புக்கள், எவையேனும் இருப்பின், அவற்றின் செலவுக்குச் சமமான தொகையொன்றால் அதிகரித்த தொகை; அல்லது

..........(12..

(11) வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி அவ்வாதனம் நன்கொடையளிக்கப்பட்ட சாதனத் தேதியன்று பகிரங்கச் சந்தையில் விற்கப்பட்டிருந்தால் என்ன விலையைப் பெற்றிருக்குமோ அந்த விலை,

ஆகியவற்றில் எது குறைவானதோ அது என்று பொருளாகும்.

ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

26. இந்நியதிச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

* 7 ஆம் பக்க 22பிரிவின் 99(2) மாகாணத்துக்குள்ளாக நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றமொன்றினால் சேகரிக்கப்பட்ட எல்லாக் கட்டணங்களும் மாகாணத்தின் மாகாண நிதியத்துக்குள் வரவு வைக்கப்படுத்தல் வேண்டும்."